**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

*Grains found in imported wheat*

* 411 Q.—*Thiru* N. DENNIS & THIRU D. S. A. SIVAPRAKASAM : **Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—**

(*a*) whether black seeds were found in imported wheat in this State at many places; and

(*b*) if so, the action taken thereon?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** (அ) 1973-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களில் மத்திய தொகுப்பிலிருந்து இம் மாநிலத்திற்கு ஒதுக்கப்பட்ட கோதுமையில் 'எர்காட்' என்ற நோயால் பாதிக்கப்பட்ட கிலோவுக்கு ஏறத்தாழ எட்டு என்ற அளவில் ஒரு சில தானிய மணிகள் காணப்பட்டன.

(இ) நோயால் பாதிக்கப்பட்ட தானிய மணிகளை நீக்கி விடுமாறு எல்லா கோதுமை மாவு அரைவை ஆலைகளுக்கும் உத்தரவிடப்பட்டது. ஆலைகளும் அவ்வாறே பாதிக்கப்பட்ட தானியமணிகளை நீக்கி விட்டன.

**திரு. என். டென்னிஸ் :** தலைவர் அவர்களே, இதுபோன்ற செயல்களைத் தடுப்பதற்கான தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் இருக்கிறதா என்பதை அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** தலைவர் அவர்களே, இது 1972-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் ஒரு கால கட்டத்தில்தான் இப்படி கலப்பாக வந்தது. அப்பொழுதே அதற்கான நடவடிக்கை எடுத்து அது முடிவாகி விட்டது. அதற்குப் பிறகு அப்படிப்பட்ட தானியங்கள் வரவில்லை.

**திரு. என். கே. பழனிசாமி :** சார், கோழி தீவனம் என்று இங்கே கோதுமை இறக்குமதி செய்யப்படுகிறது. அதை ஊற வைத்து, ரவையாக்கி, அதிகப்படியான லாபத்திற்கு வியாபாரிகள் விற்பது சர்க்காருக்குத் தெரியுமா? அதைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

*1973 நவம்பர் 26]*

*மாண்புமிகு திரு. மன்னே ப. நாராயணசாமி : இதுவரையிலே அப்படி ஒரு செய்தி அரசுக்குக் கிடைக்கவில்லே.*

**கோவில்பட்டி கோட்டத்தில் வழங்கப்பட்ட கூட்டுறவு கடன்கள்.**

** 412 **வின—திரு. சோ. அழகர்சாமி :** மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா :*

*சென்ற ஆண்டு வறட்சியால் பாதிக்கப்பட்டிருந்த கோவில் பட்டி கோட்டத்தில் எந்தெந்த ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் கூட்டுறவு குறுகியகாலக் கடன்களே மத்தியக் காலக் கடனுக மாற்றப்பட்டது?*

***மாண்புமிகு திரு. மன்னே ப. நாராயணசாமி*** *: சென்ற வருடம் (1971-72)ல் கோவில்பட்டி கோட்டத்தில் உள்ள எல்லா ஊராட்சி ஒன்றியங்களேச் சார்ந்த பகுதிகளிலும் குறுகிய கால கடன்களே மத்திய காலக் கடன்களாக மாற்றப்பெற்றுள்ளன.*

***திரு. சோ. அழகர்சாமி :*** *தலேவர் அவர்களே, கோவில்பட்டி கோட்டத்தில் விளாத்திகுளம் ஊராட்சி ஒன்றியம் அதிலே சேர்க்கப்படவில்லே. காரணம் ஒரு குறிப்பிட்ட காலத்தில் அதிக மான மழை பெய்கிறது என்று அப்பொழுது அங்கு வந்த ரெவின்யூ போர்டு மெம்பர் சொல்லியுள்ளார். அதனுல், கடன்களே ஒதுக்கவேண்டியதில்லேயென்று முடிவு எடுக்கப்பட்டது. ஒரு குறிப்பிட்ட காலத்தில் மழை பெய்வதாலே, எந்தவிதமான மகசூலும் வருமா என்பது அவர்களுக்குத் தெரியுமோ தெரியாதோ தெரியவில்லே. இனிமேலாவது, அப்படி விடப்படாமல் இருக்கிற நிலேயை ஏற்படுத்த அரசு வழிவகை செய்யுமா என்று அறியவிரும்புகிறேன்.*

***மாண்புமிகு திரு. மன்னே ப. நாராயணசாமி*** *: விளாத்தி குளத்தில் 1971-72-ல் ரூ. 9.92 இலட்சம் மத்திய காலக் கடனுக மாற்றப்பட்டிருக்கிறது. 1972-73ல் தான் அந்தக் கடன் அதற்கு மட்டும் கொடுக்கப்படவில்லே.*